ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2081/48 - 2018 ජූලි මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.07.26

2081/48 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை**

ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக் கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சு.

கொழும்பு 05,
2018, யூலை 26.

**அட்டவணை**

ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதிய 14,668 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்டவையும், காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டவையும், 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இறுதியாக மாற்றப்பட்டவையுமான முடிவுகள், அட்டவணையின் II ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினைப் பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும்.

1A - PG 4143 - 202 (2018/07)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பகுதி II

தொழிலாளர்கள் வகுப்பு

தரம் I (அ) வடிவமைப்போர், தையலாளர்கள், வடிவம் துளையிடுவோர், டிஸ்கெற் தயாரிப்போர்.

(ஆ) தலைவர்கள் அல்லது பகுதி மேற்பார்வையாளர்கள்.

தரம் II துணி வெட்டுவோர், கையால் துணி வெட்டுவோர், இயந்திரம் பழுதுபார்ப்போர், இறுதியாகச் சரிபார்ப்போர்.

தரம் III சரிபார்ப்போர், தரம் பிரிப்போர், துணி அழுத்துவோர் (ஆண்கள்), சில்லறை வேலை செய்வோர் (பெண்கள்), பெயர் முத்திரையிடுவோர் (பெண்கள்), துணி அழுத்துவோர் (பெண்கள்), தையல் இயந்திரம் இயக்குவோர், மின் அழுத்தி இயக்குநர்கள், வழங்கும் தொழிலாளர்கள் (பெண்கள்), சித்திர வேலைப்பாடு இயந்திரத்தினால்/ கையால் செய்வோர்.

தரம் IV துணி விரிக்கும் ஆண்கள், துணி விரிக்கும் பெண்கள், பொதியிடுவோர், செலபீன் பைகளும் அட்டைப் பெட்டிகளும் தயாரிப்போர், தேர்ச்சியற்ற தொழிலாளர்கள், களஞ்சியத் தொழிலாளர்கள்.

தரம் V பயிற்சியாளர்களும் பயிலுநர்களும்.

பயிற்சியாளர்களும் பயிலுநர்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் தொழில் பயிற்சியாளர் அல்லது பயிலுநர் தொடர்பான பயிற்சிக்காலம் 156 வேலை நாட்களைக் கொண்டமைந்ததாகக் கருதப்பட வேண்டும்.

### மாதத்திற்கான ஆகக் குறைந்த சம்பள வீதங்கள்

| ஊழிய ஆண்டு | தரம் I அ<br>ரூ. ச. | தரம் I ஆ<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III<br>ரூ. ச. | தரம் IV<br>ரூ. ச. | தரம் V<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 14,650.00 | 14,100.00 | 12,700.00 | 12,600.00 | 12,000.00 | 7,500.00 |
| 2 ஆம் ஆண்டு | 14,850.00 | 14,275.00 | 12,850.00 | 12,725.00 | 12,100.00 | |
| 3 ஆம் ஆண்டு | 15,050.00 | 14,450.00 | 13,000.00 | 12,850.00 | 12,200.00 | |
| 4 ஆம் ஆண்டு | 15,250.00 | 14,625.00 | 13,150.00 | 12,975.00 | 12,300.00 | |
| 5 ஆம் ஆண்டு | 15,450.00 | 14,800.00 | 13,300.00 | 13,100.00 | 12,400.00 | |

8 - 469

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.